3rd April 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the interim arrangements is already there. The Commissioner, Hindu Religious and Charitable Endowments is in charge of the institutions.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNONUCEMENT BY THE HON. THE SPEAKER MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor of Madras has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958, and for the consideration in the Assembly of the Madras Animal Preservation Bill, 1958, as passed by the Madras Legislative Council.

III.—CALLING ATTENTION TO THE CLOSURE OF TEXTILE MILLS DURING PERIODS OF POWER CUT.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. கே. கோதண்டராமன் அவர்கள் 40-வது ரூல் பிரகாரம் ஒரு அவசர பிரேரணையை கனம் மந்திரி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறார். அதற்கு அனுமதி தந்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி சுருக்கமாக பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமது ராஜ்யத்தில் இருக்கக் கூடிய பஞ்சாலை மில்களுக்கு போதுமான அளவுக்கு கரண்ட் சப்ளை இல்லாத (9-30 a.m.) காரணத்தால் ஒவ்வொரு பிரதேசத்திலும் மூன்று ஷிப்டுகள் இருக்கக் கூடிய மில்களில் எல்லாம் இரண்டு ஷிப்டுகளாக குறைக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மில்லில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் இன்றைக்கு இருக்கக் கூடிய கரண்ட் விஷயம். கரண்ட் போதிய அளவு கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய அதேநேரத்தில் பல மில்களிலும் ஜெனரேட்டர்கள் இருக்கிறது. அவைகளை ஓட்டுவதின் மூலமாக கரண்ட் உற்பத்தி செய்யமுடியும். அதன் மூலம் எல்லா தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்க முடியும். ஏற்கெனவே இருக்கக்கூடிய சம்பளம் போதாது என்றும் சம்பள உயர்வு வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இப்போது பாதி வேலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தொழிலாளர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிகளின் அடிப்படையில் தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்தமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இன்றைக்கு எந்தெந்த மில்களில் எல்லாம் ஜெனரேட்டர்கள் இருக்கிறதோ அந்த மில்களில் எல்லாம் அதன் மூலமாக கரண்டை கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குள்ள அதிகாரம் எனக்கு கிடையாது என்று தொழிலாளர் இலாகா அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால் எலக்ட்ரிஸிட்டி மந்திரி அவர்கள் மூலமாக இதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே இதன் மூலமாக நடவடிக்கை எடுத்து கரண்டு கூடுதல் உற்பத்தி பண்ணுவதற்கு வழி செய்து கொடுப்பது, தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்க்கைத்தரத்தை நடத்துவதற்கு வசதி செய்து கொடுப்பது போலாகும். குறிப்பாக குடியாத்தம் திருமகள் மில்லிலே ஒரு ஜெனரேட்டர் இருக்கிறது. அந்த ஜெனரேட்டரை ஓட்டவேண்டுமென்று சொன்னால், அது பழுது அடைந்திருக்கிறது, சாமான்களுக்காக எழுதியிருக்கிறோம், இன்னும் வரவில்லை என்று சாக்குப் போக்குகள் சொல்லப்படுகின்றன. உண்மையிலேயே, ஜெனரேட்டர்